இனிமையான குழந்தைகளே! சங்கமயுகம் பிராமணர்களுக்கு நன்மை செய்யக்கூடிய யுகமாகும். ஆகையினால் எப்போதும் பெருமையில் இருக்க வேண்டும். எந்த விசயத்திலும் கவலைப் படக்கூடாது.

கேள்வி: யாருடைய நிலை (அவஸ்தா) நன்றாக இருக்குமோ, அவர்களின் அடையாளங்கள் என்னவாக இருக்கும்?

பதில்: அவர்களுக்கு எந்த ஒரு விசயத்திலும் அழுகை வராது. அவர்கள் வாடிப்போக மாட்டார் கள், கவலைப்படமாட்டார்கள். ஒவ்வொரு காட்சியையும் சாட்சியாகப் பார்ப்பார்கள். ஒரு போதும் ஏன், என்ன என்ற கேள்விகள் கேட்க மாட்டார்கள். யாருடைய பெயர், ரூபத்தையும் நினைவு செய்ய மாட்டார்கள். ஒரு பாபாவின் நினைவில் சிரித்த முகத்துடன் இருப்பார்கள்.

பாடல்: தாயே ஓ தாயே..........

ஓம் சாந்தி. (மாதேஸ்வரி அவர்கள் சரீரத்தைத் துறந்ததும், **25-6-1965** அன்று இந்த மகாவாக்கியத்தை பாப்தாதா கூறினார். தயவு செய்து அதை கவனத்தில் கொண்டு படிக்கவும்)

எல்லைக்கப்பாற்பட்ட தந்தையை நினைவு செய்து கொண்டே இருங்கள் என்று இனிமையான குழந்தைகளுக்கு கட்டளையிடப்படுகிறது. எந்த பெயர் ரூபமுடைய குழந்தைகள் பாபாவின் சேவையில் இருந்தாலும், அவர்களிடமிருந்து தான் இந்த ஞானம் மற்றும் யோகத்தைக் கேட்க வேண்டும். அவர்களும் இதைத் தான் சொல்வார்கள்-பாபாவை நினைவு செய்யுங்கள், ஏனெனில் அவரிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கிறது. சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று மம்மா கூட அதைத்தான் சொல்கிறார், குழந்தைகள் கூட அதைத் தான் சொல்கிறார்கள். குழந்தை களாகிய நீங்கள் இங்கே சிவபாபாவின் நினைவில் அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் எந்தக் கவலையும் படக்கூடாது. ஏனெனில் நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையிடமிருந்து இந்த ஆஸ்தியை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதில் யாரேனும் சரீரத்தை விட்டுச் சென்றால், இது விதியாகும் என்று நாம் சொல்வோம். கல்பத்திற்கு முன்பு கூட இப்படி ஆகி இருந்தது. ஏனெனில் டிராமாபடி தான் நடக்க வேண்டும் அல்லவா! இப்படி புரிந்து கொள்வதன் மூலம் எந்த கவலையும் இருக்காது. இன்று மம்மா சென்றார்கள், நாளை இன்னும் வேறு யாரேனும் சென்று விட்டர்கள் என்றாலும் கூட பாபா கண்டிப்பாக முரளி சொல்லத் தான் வேண்டும். பாபா உங்களுக்குப் புதுப்புது விசயங்களை சொல்லிக் கொண்டே, அதன் அர்த்தத்தையும் புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். மேலும் இதைத் தான் அனைவருக்கும் சொல்கிறார்-குழந்தை களே! பாபாவை நினைவு செய்யுங்கள், யாருடைய பெயர் ரூபத்திலும் மாட்டிக் கொள்ளாதீர்கள். இது அனைத்துக் குழந்தைகளுக்குமான ஞானமாகும். போகப்போக இன்னும் நிறைய அதிசய மான விசயங்களைப் பார்ப்பீர்கள். இந்த நேரமே துக்கமான விசயங்கள் நடக்கும் நேரம் தான். ஆனால் அந்த துக்கத்தினால், நமக்கு எந்தக் கவலையும் கிடையாது. பாருங்கள், இந்த சாகார பாபா எந்தக் கவலையிலும் இல்லை. ஏனெனில் நாம் பாபாவைத் தான் நினைவு செய்ய வேண்டும், பாபாவிடமிருந்து தான் ஆஸ்தி பெற வேண்டும் என்று நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். படைப்பின் மூலம் எந்த ஆஸ்தியும் கிடைக்காது என்று பாபா புரிய வைத்திருக்கிறார். படைப்புக்கு

படைப்பவரிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்க வேண்டும். எனவே படைக்கப்பட்ட அனைவரும் (குழந்தைகள்) ஒரு படைப்பவரையே நினைவு செய்ய வேண்டும். எது வேண்டு மானாலும் நடக்கட்டும். எந்த தடை வந்தாலும் அதில் சந்தேகப்படுவதற்கான எந்த விசயமும் இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் ஒரு சிவபாபாவைத் தான் நினைவு செய்ய வேண்டும். இதில் தான் குழந்தை களின் நன்மை இருக்கிறது. ஒருவேளை யாரேனும் நல்ல சேவை செய்து கொண்டே சென்று விட்டார்கள் (சரீரம் விட்டு விட்டார்கள்) என்றால் யாரெல்லாம் அப்படிச் செல்கிறார் களோ, அவர்கள் சென்று வேறு ஏதோ இடத்தில் பாகத்தை ஏற்று நடிக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளுங்கள். ஏதோ நன்மைக்காகத் தான் இவை யனைத்தும் நடக்கிறது. ஏனெனில் பாபா கல்யாணகாரி (நன்மை செய்பவர்) ஆவார். மேலும் இந்த சங்கமயுகம் கூட பிராமணர்களுக்கு நன்மை செய்வதற்காகத் தான் இருக்கிறது. ஒவ்வொரு விசயத்திலும் நன்மை என்று புரிந்து பெருமையில் இருக்க வேண்டும். ஏனெனில் நாம் ஈஸ்வரனுடைய குழந்தைகள் ஆவோம். நாம் ஈஸ்வரனிடமிருந்து ஆஸ்தி எடுக்கிறோம். ஆஸ்தி எடுத்துக் கொண்டே யாரேனும் சென்று விட்டால், கண்டிப்பாக அவருக்கு வேறு ஏதேனும் பாகம் நடிக்க வேண்டி இருக்கும். அதில் இதைவிட அதிகமாக ஏதேனும் காரியம் செய்ய வேண்டி இருக்கும்.

அஹோ சௌபாக்கியம்! கல்பத்திற்கு முன்பு கூட இதே போல பாபாவின் உதவி யாளர்களாக நாம் தான் பாகத்தை நடித்திருந்தோம். உதவியாளர் ஆகிக்கொண்டே, தளபதி (தலைவர்) கூட இறந்து போய் விடுகின்றனர். நாடகப்படி தான் இவையனைத்தும் நடக்கிறது என்று நாம் புரிந்து கொள்கிறோம். யாரும் சென்றால் என்ன ஆகிவிட்டது! நாம் அதற்காக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நம்முடையது அனைத்தும் குப்தமானது (மறைமுகமானது) ஆகும். உண்மையில் யாருக்கு ஒருபோதும் கண்ணீர் வருவதில்லையோ, அவர்களின் நிலை (அவஸ்தா) நன்றாக இருக்கிறது என்று அர்த்தம். மம்மா சரீரம் விட்டு விட்டார்! இப்போது என்ன ஆகுமோ! என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். கண்ணீர் வந்தால் தேர்ச்சி அடைய மாட்டீர்கள். ஏனெனில் நம் அனைவருக்கும் ஆஸ்தி தரக்கூடிய பாபா அமர்ந்திருக்கிறார் அல்லவா! அவரோ எப்போதும் அமரராகவே (அழியாதவராக) இருக்கிறார். அவருக்காக யாரும் ஒருபோதும் கண்ணீர் விடவேண்டிய அவசியமில்லை. நாமே மகிழ்ச்சியாக உடலை விடுவதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மம்மா வுக்குக் கூட ஏதோ காரியத்திற் காக அந்த நேரம் செல்ல வேண்டி இருந்தது. இது கூட நாடகம் தான். தன்னுடைய நிலையின் அனுசாரமாக யாரேனும் சரீரம் விடுகிறார்கள் என்றால் அவர்களின் நன்மை அதில் அடங்கியிருக்கிறது. மிக நல்ல வீட்டில் பிறவி எடுத்து, அங்கேயும் தன்னுடைய மகிழ்ச்சியைத் தருவார்கள். சின்னச்சின்னக் குழந்தைகள் கூட அனைவரையும் குஷி ஆக்கி விடுகிறார்கள். அனைவரும் அந்தக் குழந்தையை அதிகம் மகிமை செய்கின்றனர். ஆக குழந்தைகள் டிராமா மற்றும் பாபா மீதான ஆதாரத்தில் இருக் கின்றனர். என்னவெல்லாம் நடக்கிறதோ, வினாடிக்கு வினாடி அது டிராமாவில் பதிவாகி யுள்ளது. இப்படியாகப் புரிந்து மகிழ்ச்சியில், எப்போதும் களிப்புடன் இருக்க வேண்டும்.

எந்த ஒரு பெயர் ரூபத்திலும், நாம் மாட்டிக் கொள்ளக் கூடாது. இது சரீரம் என்று

நமக்குத் தெரியும் மற்றும் இது அழியத் தான் வேண்டும். ஒவ்வொருவருடைய பார்ட்டும் பதிவாகியுள்ளது. நாம் அழுகின்றோம் என்றால் அழுவதனால் அவருடைய பாகத்தை மாற்ற முடியுமா என்ன! ஆகையினால் குழந்தைகள் முற்றிலும் அசரீரியாக, சாந்தியாக மற்றும் சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும். ஆடாத, நிலையான இராஜ்யம் அடைய வேண்டும் என்றால் அது போல ஆகவும் வேண்டும். ஏதேனும் அசம்பாவிதம் நடந்து விட்டால், டிராமாவின் விதி அப்படி இருக்கிறது, இதில் வருத்தப்படுவதற்கான விசயம் ஏதுமில்லை. கல்பத்திற்கு முன்பும் அது போலத் தன் நடந்தது. அசம்பாவிதம் நடக்கத் தான் வேண்டும், போகப்போக நில நடுக்கங்கள் ஏற்படும். உங்களில் யாரும் இறக்க மாட்டார்கள் என்ப தெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் இறக்க நேரிடும். எந்த அசம்பாவிதமும் நடக்கலாம். ஆகவே பாபா புரிய வைக்கிறார், குழந்தைகளே எப்போதும் பாபா நினைவில் பெருமையில் இருங்கள். இதில் யாருக்கு என்ன பாகம் கிடைத்துள்ளதோ, அதை நடிக் கிறார்கள். இதில் நாம் செய்வதற்கு என்ன இருக்கிறது? நம்முடைய ஞானமே அப்படிப் பட்டது - அம்மா இறந்தாலும் அல்வா சாப்பிட வேண்டும், அதாவது ஞான ரத்தினங்களைக் கொடுக்க வேண்டும். பாபா சொல்கிறார், இந்த பாபா (பிரம்மா பாபா) கூட போய் விடுவார் என்று புரிந்து கொள்ளுங்கள்... ஆக குழந்தைகளுக்கு ஞானமோ கிடைத்திருக்கிறது-நாம் சிவபாபாவிடமிருந்து தான் ஆஸ்தி பெற வேண்டும், இவரிடமிருந்து (பிரம்மா பாபா) அல்ல. பாபா சொல்கிறார், இந்த அனைத்து குழந்தைகளும் என்னிடமிருந்து ஆஸ்தி பெற்று, பிறருக்கு வழி சொல்கின்றனர். குழந்தைகளாகிய நீங்கள் பார்வையற்றோர்க்கு ஊன்றுகோல் ஆக வேண்டும், பாபாவின் அறிமுகம் தர வேண்டும். அனைவரின் மீதும் கருணை காட்ட வேண்டும். உங்களுடைய முயற்சியே, துக்கமான அப்பாவி மனிதர்களுக்கு சுகத்தின் வழியை சொல்வது தான் ஆகும். இந்த உலகத்தில் ஒரு பாபாவைத் தவிர சுகத்திற்கான வழியைச் சொல்பவர் வேறு யாரும் கிடையாது. விடுவிப்பவர், துக்கத்தை நீக்கி சுகம் தருபவர் ஒரே ஒருவர் தான் ஆவார். அவரைத் தான் நினைவு செய்ய வேண்டும். என்ன நடந்தாலும், இங்கே துக்கத்திற்கான எந்த விசயமும் இருக்கக் கூடாது. ஆனால் நாம் தெரிந்திருக்கிறோம், உங்களின் மம்மா அனைவரையும் விட நம்பர் ஒன் சேவாதாரி குழந்தை என்று புகழ் பாடபப்படுகிறார். அவர்களின் கையில் வீணை காட்டியிருக்கிறார்கள். ஜெகதம்பா அல்லது மாதேஸ்வரி மிக நன்றாகப்புரிய வைத்தார்கள். அவர்களும் (மம்மாவும்) சொன்னார் கள் - சிவபாபாவை நினைவு செய்யுங்கள், என்னை நினைவு செய்யாதீர்கள். மன்மனாபவ, மத்யாஜி பவ - இந்த இரண்டு வார்த்தைகளும் புகழ் பெற்றது. மற்றவையோ விரிவான விசயங்களாகும்.

ஆக எந்த சூழ்நிலையிலும், இது என்ன நடக்கிறது? இப்படி ஏன் ஆனது? என்று ஏதேனும் சந்தேகம் யாருக்காவது வந்தால், அதன் மூலம் தனக்குத் தானே நஷ்டப்படுத்திக் கொள்வார்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு எந்த சூழ்நிலையிலும் துக்கத்தின் அனுபவம் ஏற்படக் கூடாது. நோய்வாய்ப்பட்டாலும், என்ன நடந்தாலும், அது கர்மக்கணக்கு ஆகும். பாபா இது என்ன? என்று பாபாவிடம் கேட்கின்றனர். பாபா சொல்வார், இது உங்களுடைய கர்மக்கணக்கு என்று. எந்த விசயமும் நடக்கும் முன்பே சொல்வதாக டிராமாவில் இல்லை எனும் போது நான் எப்படிச் சொல்ல முடியும்! இந்த பாபாவே சாட்சியாகிப் பார்க்கும் போது, குழந்தைகளும் சாட்சியாகிப்

பார்க்க வேண்டும். மேலும் பாபாவின் நினைவில், நாம் ஈஸ்வரனுடைய குழந்தைகள் மற்றும் ஈஸ்வரனுடைய பேரன் பேத்திகள், ஈஸ்வரனிட மிருந்து ஆஸ்தி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்ற பெருமிதத்தில் இருக்க வேண்டும். மம்மா கூட ஈஸ்வரனிடமிருந்து ஆஸ்தி எடுத்துக் கொண்டே, சரீரத்தை விட்டு விட்டார் என்று நாம் தெரிந்திருக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் பாபா மற்றும் ஆஸ்தியை மட்டும் நினைவு செய்ய வேண்டும். அனைத்தும் முயற்சியின் ஆதாரத்தில் தான் உள்ளது. எவ்வளவு நாம் படிக்கிறோமோ, அவ்வளவு உயர்ந்த பதவியை அடைவோம், உயர்ந்த இளவரசன் ஆவோம் என்று இந்தக் குழந்தைகள் கூட அனுபவம் செய்ய முடியும். சூரிய வம்சத்திலும் இளவரசர்கள் இருக்கின்றனர், சந்திர வம்சத்திலும் இளவரசன் இளவரசி இருக்கின்றனர். ஆக குழந்தைகள் படிப்பு படிக்கத் தான் வேண்டும், என்ன நடந்தாலும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும். யாருடைய தாயோ தந்தையோ இறந்து விட்டால், குழந்தை படிப்பை நிறுத்தி விடுமா என்ன? இல்லை. ஆக நீங்களும் தினமும் படிக்க வேண்டும். நீங்கள் ஒரு நாளும் படிப்பைத் தவற விடக் கூடாது, ஒவ்வொரு சூழ்நிலையிலும், சேவையும் கண்டிப் பாகச் செய்ய வேண்டும். ஒவ்வொரு நொடியும், புத்தியில் அதே பாபாவின் நினைவிருக்க வேண்டும். உங்களுக்கு அவர் தான் கற்பித்துக் கொண்டிருக்கிறார். மேலும் அவரிடமிருந்து தான் ஆஸ்தி பெற வேண்டும். அவர் மூலம் தான் நம்முடைய புத்தியின் பூட்டு திறந்திருக் கிறது. முழு பிரம்மாண்டம், சூட்சும வதனம் மற்றும் உலகத்தின் ஆதி மத்திய அந்திம ஞானம் நம்முடைய புத்தியில் உள்ளது. இந்த ஞானத்தின் மூலம் தான் நாம் சக்கர வர்த்தி ஆகின்றோம். அவ்வளவு தான், இதே போதையில், மகிழ்ச்சியில் இருந்து அனைவருக்கும் அப்படியே சொல்ல வேண்டும்.ஏனெனில் பக்கா பிராமணக் குழந்தைகளாகிய உங்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது. இதில் வாடிப்போவதற்கும், கவலைப்படுவதற்குமான எந்த விசயமும் இல்லை. அப்படிப்பட்ட நல்ல நிலை (அவஸ்தா) வேண்டும்.

உங்களுக்குத் தெரியும், கடைசியில் நாம் வெற்றி பெற்றே தீருவோம். நிறைய பேர் தன்னுடைய ஆஸ்தி எடுக்க வருவார்கள். என்ன நடந்தாலும் உங்கள் சேவை விரிவாகிக் கொண்டே போகும். உங்களிடம் நடத்தை தெய்வீகமாக மட்டும் இருக்க வேண்டும். அதில் எந்த அசுர குணங்களும் இருக்கக் கூடாது. பிறருடன் சண்டை போடுவது, சச்சரவு செய்வது, கடுமையாகப் பேசுவது அல்லது உள்ளுக்குள் பேராசை, கோபம் போன்றவை இருந்தால், மிகக் கடுமையான தண்டனை அடைய வேண்டி இருக்கும். ஆகையினால் யாருக்கும் ஒருபோதும் துக்கம் கொடுக்கக் கூடாது. நாம் சுகத்தின் வழியை அனைவருக்கும் சொல்ல வேண்டும். சிறிய குழந்தைகள் தவறு செய்தாலும், அவர்களை அடிக்கக் கூடாது. அவர்களையும் அன்போடு நடத்த வேண்டும். வீட்டிலும் மிகுந்த யுக்தியோடு நடக்க வேண்டும். நிறைய பேர் இங்கே நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் வீட்டிற்குச் சென்றவுடன் அவர்களை மாயை துன்புறுத்தி விடுகிறது. இதைக் கூட பாபா புரிய வைக்கிறார்-குழந்தைகளே! புயல் பலமாக வந்து கொண்டே இருக்கும், நாளுக்கு நாள் புயலும் தடையும் வந்து கொண்டே இருக்கும், நீங்கள் பயப்படக் கூடாது. பாபா சொல்கிறார், நம்முடைய இந்த ருத்ர ஞான யக்ஞத்தில் நிறைய தடைகள் வரும், ஏனெனில் இது புதிய ஞானமாகும்.

நீங்கள் சாஸ்திரங்களை ஏற்கிறீர்களா? என்று சிலர் கேட்கிறார்கள். அப்போது

சொல்லுங் கள்- ஆம் ஏற்கிறோம், இவையனைத்தும் பக்தி மார்க்கத்தின் சாஸ்திரங்களாகும், இது ஞான மார்க்கமாகும். ஞானேஸ்வரர் பாபா சொல்கிறார், என்னை நினைவு செய்யுங்கள் போதும். நாங்களும் உங்களுக்குச் சொல்கிறோம், பாபாவை நினைவு செய்யுங்கள். செய்வதும், செய்யாமல் இருப்பதும் உங்கள் விருப்பம். இப்போது நரகம் இராவண இராஜ்யம் ஆகும். இப்போது பாபா மற்றும் சொர்க்கத்தை நினைவு செய்யுங்கள். நீங்கள் பல பிறவிகளாக கங்கையில் ஸ்நானம் செய்து வந்திருக்கிறீர்கள். பிறகும் கூட உலகம் தூய்மை யிழந்து கொண்டே வருகிறது. இப்போது பாபா சொல்கிறார், என்னை நினைவு செய்யுங்கள் போதும். யார் இதைச்( பிராமண குலம்) சேர்ந்தவர்களோ, அவர்களின் சமஸ்காரத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம், அவர்கள் உடனே புரிந்து கொள்வார்கள்.

நீங்கள் இப்போது அதிபுத்திசாலிகளாக இருக்கிறீர்கள். அறிவு நிறைந்தவர்களை புத்தி சாலி என்று சொல்லப்படுகிறது. ஆக நீங்கள் அதே போதையில் இருக்க வேண்டும். மற்றபடி துக்கத்திற்கான எந்த விசயமும் கிடையாது. டிராமா நடந்து கொண்டிருக்கிறது என்று நாம் தெரிந்து கொண்டோம். நீங்கள் சொல்வீர்கள்--ஆஹா! மம்மா சென்று விட்டார்கள்! அவர் மற்றொரு நடிப்பை நடிக்கச் சென்று விட்டார். இதில் குழப்ப மடைவதற்கோ, அழுவதற்கோ, துக்கப்படுவதற்கோ எந்த அவசியமும் இல்லை. அவர் ஏதோ ஒரு உயர்ந்த சேவை செய்வதற்காக சென்று விட்டார். நீங்கள் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறீர்கள். யார் சரீரம் விட்டாலும், அவர்கள் போய் உயர்ந்த சேவை செய்வார்கள். ஆகையினால் குழந்தைகள் எந்த துக்கமும் பட வேண்டாம். மம்மா மட்டும் என்ன! அனைவரும் சென்று விடுவார்கள். நாம் கூட பாபாவிடம் செல்ல வேண்டும். நம்முடைய காரியமே பாபாவுடன் தான். அனைவருடைய காரியமும் பாபாவுடன் தான். மம்மாவின் காரியமும் பாபாவிடம் தான் இருந்தது. இப்போது அவரிடமிருந்து இந்த ஞானத்தைப் பெற்று, சேவை செய்து, மற்றொரு சேவைக்காக மற்றொரு நடிப்பை நடிக்கச் சென்று விட்டர்கள். நாம் சாட்சியாகிப் பார்க் கின்றோம். மம்மா போய் விட்டார், இவர் போய்விட்டார், அவர் போய்விட்டார்....... அட ஆத்மா சேவைக்காகச் சென்றுள்ளது. அனைத்து சரீரமும் சாம்பலாகித் தான் தீர வேண்டும். ஆகையால் குழந்தைகள் ஒருபோதும் எவ்வித கவலையும் படக் கூடாது. ஆம், இது சத்திய மானது, பாபாவின் இந்த மாணவி மிக நன்றாக இருந்தார்கள், நன்றாகப் புரிய வைத்தார்கள், புகழ்பாடப்படுகிறார். எந்த விதமான சந்தேகம் வந்தாலும், அனைத்தும் முடிந்து விட்டது, பதவி கீழானதாகி விடும். ஆகையினால் பாபா குழந்தை களுக்குப் புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார், எவ்விதமான கவலையும் படாதீர்கள். என்ன வழி காட்டுதல் பாபாவிடமிருந்து கிடைக்கிறதோ, அதை நடைமுறையில் கொண்டு வந்து கொண்டே இருங்கள். இது என்ன இப்படி ஆகி விட்டதே என்று புரிந்து கொள்ளா தீர்கள். யார் பாபாவையும் ஞானத்தையும் மறக்கிறார்களோ, அவர்களுக்குக் கவலை ஏற்படும். குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆவீர்கள். யாருக்கு என்ன பார்ட் இருக்கிறதோ, அதில் நாம் என்ன தான் செய்ய முடியும்?

நல்லது, இரவில் அனைவரும் நினைவில் அமருங்கள், நல்ல வருமானம் ஆகிவிடுகிறது. பாபா இங்கே வந்து குழந்தைகளைப் பார்க்கிறார், இந்த மலர்த்

தோட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார். இப்போது பிராமணர்கள், பிறகு தேவதைகளின் மலர்த் தோட்டம் உருவாக வேண்டும். இப்போது இங்கே அனைவரும் முயற்சி யாளர்கள் ஆவர். நல்ல மலராவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். முள்ளிலிருந்து மலராகிக் காட்டுவார்கள். நீங்கள் இங்கே உறுதியாக (எதற்கும் அசையாமல் நிலையாக) அமர வேண்டும். பாபா பாருங்கள், நம்மை எத்தனை பக்காவாக (உறுதியாக) ஆக்குகிறார். என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று பாபாவிடமிருந்து கட்டளை கிடைத்திருக்கிறது. யாரேனும் அழுதால், பாபா சொல்வார், யார் அழுதார்களோ, அவர்கள் இழப்பார்கள். வாடிப்போன மலராக யாரும் இல்லை தானே? என்று பாபா பார்க்கிறார். இல்லை. அனைவரும் மஹாவீரர்கள் ஆவர். இப்படிப்பட்ட தடைகள் வரத் தான் வேண்டும். இது டிராமா அல்லது விதி ஆகும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட ஞான நட்சத்திரங்களுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தன்னுடைய தெய்வீக நடத்தையை நடைமுறைப்படுத்த வேண்டும். ஒருபோதும் சண்டை போடுவதோ, சச்சரவு செய்வதோ கூடாது. கடுமையான வார்த்தைகள் பேசக் கூடாது, பேராசை வைக்கக் கூடாது. யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது. அனைவருக் கும் சுகத்தின் வழியைச் சொல்ல வேண்டும்.

2. எந்தவொரு தடையிலும் சந்தேகம் எழக்கூடாது. டிராமாவின் நிச்சயிக்கப்பட்ட விதி என்றுபுரிந்து பெருமையில் இருக்க வேண்டும், கவலைப்படக்கூடாது.

வரதானம் : உண்மையான உள்ளத்தின் மூலமாக தந்தையை சந்தோஷப்படுத்தும் மற்றும் சந்தோஷமாக இருக்கும் இரகசியங்களுடன் கூடியவர் ஆவீர்களாக.

எந்த குழந்தைகள் உண்மையான உள்ளத்தால் தந்தையை சந்தோஷப்படுத்துகிறார்களோ, பாப்தாதா அவர்களுக்கு சுயத்தின் சம்ஸ்காரங்களில், கூட்டமைப்பில் எப்பொழுதும் (ராஜ்) சந்தோஷமாக அதாவது (ராஜ் யுக்த்) இரகசியங்களுடன் கூடியவராக இருக்கும் வரதானத்தை கொடுக்கிறார். சுயம் தனது மேலும் ஒருவர் மற்றவரின் சம்ஸ்காரங்களின் (ராஜ்) இரகசியங் களை அறிந்து கொள்வது, நிலைமைகளை அறிந்து கொள்வது - இது தான் (ராஜ்யுக்த்) ரகசியங்களுடன் கூடிய நிலை ஆகும். உண்மையான உள்ளத்துடன் தந்தைக்கு தனது கணக்கு கொடுப்பதால் மற்றும் சிநேகத்துடன் ஆன்மீக உரையாடல் நிகழ்த்துவதால் எப்பொழுதும் சமீபத் தன்மையின் அனுபவம் ஏற்படுகிறது, மேலும் பிந்தைய கணக்கு முடிந்து போய் விடுகிறது.

சுலோகன்: உண்மையான உள்ளத்துடன் (தாதா, விதாதா, வரதாதா) வள்ளல், விதியை அமைப்பவர் மற்றும் வரங்களை வழங்கும் தந்தையை சந்தோஷப்படுத்துபவர்களே ஆன்மீக ஆனந்தத்தில் இருப்பார்கள்.